# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ்
## பள்ளிவாயிலில் 02.03.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இன்று நான் மீண்டும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபாக்களுடைய சில சம்பவங்களை எடுத்துரைப்பேன். இது அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அவர்களிடம் ஏற்பட்ட வீரம், தைரியம் சம்பந்தப்பட்டதாகும். மேலும் இதன் மூலம் அவர்கள் எவ்வளவு ஆழமாக மார்க்கத்தைப் புரிவதற்கும், திருக்குர்ஆனைப் புரிவதற்கும் முயற்சி செய்துள்ளார்கள் என்பது தெரிய வரும். ஒருமுறை புரிந்ததும், அதனை ஏற்றுக் கொண்டதும், தமது நம்பிக்கைக்காக எல்லா விதமான துன்பங்களையும் துயரங்களையும் அவர்கள் சகித்துக் கொண்டனர்.

சஹாபாக்களுடைய சம்பவங்களை நான் அறிவிப்புகளின் பல்வேறு தலைப்புகளின் கீழ் திரட்டியுள்ளேன். அதனை பல்வேறு சமயங்களில் நான் எடுத்துரைப்பேன். தற்போது அவர்களுடைய வீரம், தீரம் பற்றிய ஒரு சில சம்பவங்களை எடுத்துள்ளேன்.

**முகல் சாஹிப் என்று அறியப்பட்ட மியான் அப்துல் அஜீஸ் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நானும் அய்யூப் பேக் அவர்களும் மவ்லவி அப்துல்லாஹ் டோன் என்பவரின் வீட்டிற்குச் சென்றோம். மிர்ஸா அய்யூப் பேக் சாஹிப், மவ்லவி அப்துல்லாஹ் சாஹிபிடம், நீங்கள் எங்களையும் எங்களது தலைவர் அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களையும் காஃபிர் என்று ஏன் கூறுகின்றீர்கள்? என கேட்டார்கள். மவ்லவி சாஹிப் ஓரியன்டல் கல்லூரியில் அரபிப் பேராசிரியராக இருந்தார். மேலும் குஃப்ர் ஃபத்வா கொடுப்பதில் இவரும் தனது முத்திரையைப் பதித்திருந்தார். மிர்ஸா அய்யூப் பேக் சாஹிப் உடைய கேள்விக்கு அவர் இவ்வாறு பதில் கூறினார்.

இன்னின்ன மவ்லவி, அதாவது மவ்லவி குலாம் தஸ்தகீர் கஸா, மவ்லவி முஹம்மது உசேன் பட்டாலவி, மவ்லவி நஸீர் உசேன் தெஹ்லவி, மவ்லவி அப்துல் ஜப்பார் கஸ்னவி போன்றோர் ஃபத்வா கொடுத்தனர். எனவே நானும் ஃபத்வாவை எழுதினேன் என்றார்.

அப்போது மிர்ஸா யாகூப் பேக் சாஹிப் மிகவும் தைரியத்துடன் இவர்கள் அனைவரும் நரகத்திற்கு சென்றால், நீங்களும் அவர்களைப் பின்பற்றி நரகத்திற்கு செல்வீர்களா? என்று கேட்டார்.

அப்போது அவர் நான் தவறிழைத்து விட்டேன். நான் மிர்ஸா சாஹிப் உடைய நூல்களைப் பார்த்ததில்லை என்றார். அந்த சமயத்தில் நாங்கள் இருவரும் வீட்டிற்குச் சென்று அப்போது வரை எழுதப்பட்டிருந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அனைத்து நூல்களையும் எடுத்து வந்தோம். மேலும் மூன்று மாதம் வரை அதனை படித்து வருமாறு கூறினோம். பிறகு மூன்று மாதம் முடிந்த பிறகு மீண்டும் அவரிடம் சென்றோம். அப்போது அவர் நீங்கள் சிறுவர்கள் ஆவீர்கள். அவர்கள் இருவரும் இளைஞர்களாக இருந்தார்கள். இவர்களைப் பார்த்து அவர் நீங்கள் சிறுவர்கள் ஆவீர்கள் என்றார். உங்களால் இதனை தற்போது புரிய முடியாது என்றும் கூறினார். அப்போது மிர்ஸா அய்யூப் பேக் சாஹிப் கூறினார். நான் பி.ஏ. தேர்ச்சி பெற்றுள்ளேன். படித்தவன் ஆவேன். உங்களுக்கு ஆங்கிலம் கற்க வேண்டும் என்றால் என்னிடம் வந்து கற்றுக் கொள்ளலாம். ஒருவேளை எனக்கு அரபி கற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டால் நான் உங்களிடம் வந்து கற்றுக் கொள்வேன். ஒருவேளை உங்களுடைய பார்வையில் நாங்கள் சிறுவர்களே என்றால் பிறகு சிறுவர்களுக்கு எந்த விதமான கேள்வி கணக்கும் கிடையாது தானே? இதை எங்களுக்கு நீங்கள் எழுதித்தர முடியுமா? என்று கூறிவிட்டு அங்கிருந்து வந்து விட்டோம்.

கூறுகின்றார்கள்: பிறகு மீண்டும் மூன்றாவது முறையாக நாங்கள் அவரிடம் காஜா கமாலுத்தீன் சாஹிபின் மாமனார் கலீஃபா ரஜபுத்தீன் அவர்களை எங்களுடன் அழைத்துச் சென்றோம். அவர்

வயதானவர் ஆவார். ஏனென்றால் அவர் இப்பொழுதும் நீங்கள் சிறுவர்கள் ஆவீர்கள் என்று கூறினால், நாங்கள் கலீஃபா ரஜுபுத்தீன் சாஹிபை காண்பிக்கலாம் என எண்ணியவாறு சென்றோம். அப்போது மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப், ரஜுபுத்தீன் சாஹிபிடம் பேச ஆரம்பித்தார். அப்போது அவர் முஸ்லிம்கள் பலசரக்கு கடைகள் திறந்து விட்டார்கள். மண்பாண்டக் கடைகளைத் திறந்து விட்டார்கள் என வேறு வகையான பேச்சில் ஈடுபட ஆரம்பித்தார்.

எழுதுகின்றார்கள்: இது லேக்ராம் கொலை சம்பவத்திற்குப் பிறகு நடந்த சம்பவம் ஆகும்.

அப்போது அய்யூப் பேக் சாஹிப் மவ்லவி அப்துல்லாஹ் உடைய கையைப் பிடித்தவாறு கூறினார். மறுமை நாளில் இதனைப் போன்றே மவ்லவி அப்துல்லாஹ் சாஹிபின் கையைப் பிடித்தவாறு இறைவா, நாங்கள் மூன்று முறை இவருடைய வீட்டிற்கு சென்றோம். ஆனால், இவர் நாங்கள் ஏன் காஃபிர் என்று எங்களுக்கு ஒருபோதும் விளக்கவில்லை என்று (அல்லாஹ்விடம்) கூறுவேன் என்றார்.

அப்போது மவ்லவி அப்துல்லாஹ் டோன்கி இதனைப் பற்றி எனக்கு எந்த விதமான கவலையும் கிடையாது என்று கூறினார்.

பிறகு அய்யூப் பேக் சாஹிப் கூறினார். நீங்கள் இறைவனை பொருட்படுத்த வில்லை என்றால் பிறகு நான் உங்களுக்கு வாழ்நாள் முழுவதும் அஸ்ஸலாமு அலைக்கும் எனக் கூறமாட்டேன் எனக் கூறிவிட்டு அங்கிருந்து எழுந்து வந்து விட்டோம். பிறகு இந்த வாக்குறுதியை மிர்ஸா அய்யூப் பேக் சாஹிப் வாழ்நாள் முழுவதும் கடைபிடித்தார். கூறுகிறார். மேலும் நான் மவ்லவி அப்துல்லாஹ் உடைய வாழ்நாள் வரை இதனை கடைபிடித்தேன்.

எனவே படித்த பெயர் தாங்கிய மக்களுடைய இந்த மறுப்பு அன்று முதல் இன்று வரை நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கிறது. நூல்களைப் படிப்பதே கிடையாது. அல்லது ஒரு சில பகுதிகளைப் படித்து விட்டு முன் பின் கூறப்பட்டதை பார்க்காமல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது ஆட்சேபனை செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். ஒருவரைப் பார்த்து மற்றொருவர் ஆட்சேபனை செய்கின்றனர். சில அரபு நாடுகளிலிருந்து வரக்கூடிய சம்பவங்களில் அதிக அளவு இவ்வாறு தான் உள்ளது. அதாவது பாகிஸ்தான் மவ்லவிகள் ஒன்றுசேர்ந்து அஹ்மதிகளை காஃபிர் என கூறி விட்டார்கள். எனவே நீங்கள் காஃபிர் ஆவீர்கள். வேறு எதனையும் சிந்திப்பதற்கோ, ஆராய்வதற்கோ அவசியம் இல்லை என்கின்றனர்.

எனவே இந்த நடைமுறை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆரம்பத்திலிருந்தே நடந்து கொண்டு தான் வருகிறது. இன்று வரை அதே போன்று நடந்து கொண்டிருக்கிறது.

ஹஸ்ரத் முன்ஷி காஸி மஹ்பூப் ஆலம் சாஹிப் கூறுகின்றார்கள்: நான் சில நாட்களாக பள்ளிக்கூடம் செல்லவில்லை. நான்காம் நாள் நான் பள்ளிக்கூடம் சென்றேன். அப்போது ஒரு மனிதர் டஸ்காவைச் சேர்ந்த மிர்ஸா ரஹ்மத் அலி சாஹிப். இவர் அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாம் என்ற அமைப்பில் பணிபுரிந்து வந்தார். இவர் என்னை அருகில் அழைத்தார். மேலும் என்னிடம் கேட்டார். நான்கு நாட்களாக நீ எங்கிருந்தாய் என்றார்? நான் தெள்ளத் தெளிவாக காதியான் சென்றேன் என்று கூறினேன். பைஅத் செய்து விட்டு வந்தாயா என்றார். நான் ஆம் என்று கூறினேன். அவர் இங்கு அதனைப் பற்றி எவரிடமும் கூறக்கூடாது என்றார். மேலும் அவர், நான் அஹ்மதி ஆவேன். நானும் பைஅத் செய்துள்ளேன். ஆனால் யாரும் நமக்கு எந்தவித துன்பத்தையும் இழைத்து விடக் கூடாது என்பதனால் யாரிடமும் இதனைப் பற்றி கூறியதில்லை என்றார். அப்போது நான் அவரிடம் கூறினேன். என்ன நடந்தாலும் இதனை நான் மறைத்து வைக்க மாட்டேன் என்றேன். எனவே எங்களது ஆசிரியர் மவ்லவி குலாம் ரஸூல் கிலாவாலே உடைய சகோதரியின் மகன் மவ்லவி ஜைய்னுல் ஆபிதீனிடம் அவர் எங்களது குர்ஆன் மற்றும் ஹதீஸ் பாடத்தின் ஆசிரியர் ஆவார். அவரிடம் நான் அஹ்மதி ஆகி விட்டேன் எனக் கூறினேன். இதனை அவர் மிகவும் வெறுத்தார். ஒவ்வொரு நாளும் என் மீது அதிகமாக கடுமை காட்ட ஆரம்பித்தார். எந்த அளவுக்கென்றால், மிர்ஸாவை ஏற்றுக் கொள்பவர் அனைத்து நபிமார்களையும் மறுப்பவர் ஆவார் எனக் கூறினார்.

பலமுறை அவர் என்னிடம் தவ்பா செய்; பைஅத்தை முறித்து விடு என்று கூறினார். ஆனால் நான் எப்பொழுதும் குர்ஆன் –ஹதீஸ் மூலம் ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்களின் வாழ்வு மற்றும் மரணத்தைப் பற்றி அவரிடம் விவாதித்து வந்தேன். இதற்கு அவர் ஒருபோதும் பதில் அளித்ததே இல்லை. கடுமையில் எந்த அளவு சென்றார் என்றால் அவரது வகுப்பு அதாவது அவரது பீரியடு வரும்போது என்னை சுட்டிக்காட்டி ஏய் மிர்ஸாயி பெஞ்சின் மீது ஏறி நில் என்பார். நான் அவரது கட்டளைக்கு ஏற்ப பெஞ்சின் மீது ஏறி நிற்பேன். மேலும் நான் என்ன குற்றம் செய்தேன் என்று கேட்பேன். அதற்கு அவர் நீ மிர்ஸாயி மற்றும் காஃபிராக இருப்பதே போதுமான குற்றமாகும் என்பார்.

சில நாட்களாக இவருடைய கடுமையை நான் சகித்துக் கொண்டே இருந்தேன். பிறகு ஒரு நாள் எனக்கு புதியதாக முஸ்லிம் ஆன தலைமையாசிரியரிடம் புகார் அளித்தால் என்ன என்ற சிந்தனை தோன்றியது. அவரது பெயர் ஹாக்கிம் அலி ஆகும். சில ஆசிரியர்கள நான் ஏன் அஹ்மதி ஆவேன் என்பதற்காக என்னை அடித்து வந்தார்கள். இதன்படி அவர் ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டார். அதில் மார்க்கப் பிரச்சனையின் காரணமாக எந்தவொரு ஆசிரியரும் எந்த மாணவருக்கும் தண்டனை அளிக்கக் கூடாது என குறிப்பிட்டிருந்தார். இந்த சுற்றறிக்கை வந்த பிறகு மவ்லவி ஜைனுல்லாபிதீன் சாஹிப் மற்றும் அவரைப் போன்ற சிந்தனை கொண்ட ஆசிரியர்கள் தளர்ந்து போய் விட்டார்கள். பிறகு என் மீது இழைக்கப்பட்ட கடுமைகள் குறைவாகின.

இந்த சம்பவம் 100 வருடத்திற்கு முன்பு அந்த அறிவீன காலத்தில் ஏற்பட்டது என கூற முடியாது. மாறாக இன்றும் கூட பாகிஸ்தானில் இந்த நிலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்றும் பிள்ளைகளிடம் இதே நடைமுறை கையாளப்படுகின்றது.

கடந்த நாட்களில் ஒரு மாணவனுடைய கடிதம் எனக்கு கிடைத்தது. அவன் நல்ல மதிப்பெண்களை பெற்றிருந்தான். இந்த மதிப்பெண் மூலம் அவனுக்கு கல்லூரியில் இடம் கிடைத்தது. ஃபீஸ் கட்டுவதற்காக சென்றபோது அங்கு அழைப்பாளர்களின் அலுவலர் உட்கார்ந்திருந்தார். அவருக்கு எங்கிருந்தோ இந்தப் பையன் அஹ்மதி என்பது தெரிய வந்தது. அதன்படி நீ அஹ்மதியா? என கேட்டுள்ளார். அதற்கு ஆம், நான் அஹ்மதி என கூறியுள்ளான். உடனே அவர் அந்தப் பணத்தை திருப்பிக் கொடுத்து விட்டு, உன்னுடைய அட்மிஷன் ரத்து செய்யப்பட்டு விட்டது. இதற்குப் பிறகு நீ இங்கு தென்படக் கூடாது. இல்லையென்றால் உன்னுடைய கால்களை முறித்து விடுவோம் என்று கூறியுள்ளார்.

இதனைப் போன்றே சில நாட்களுக்கு முன்பு ஒரு மாணவியுடைய கடிதம் எனக்கு கிடைத்தது. அதில் அந்த மாணவி நல்ல மதிப்பெண்கள் பெற்றிருந்தாள். படிப்பிலும் திறமை வாய்ந்தவளாக இருந்தாள். ஆனால் புதியதாக தயாரிக்கப்பட்ட, கணினிமயமாக்கப்பட்ட Board Exam Admission Form –ல் டிக் மட்டும் தான் செய்ய வேண்டும். இதற்கு முன்பு நமது பிள்ளைகள் அஹ்மதி என எழுதி வந்தார்கள். ஆனால் தற்போது அந்த Option இல்லை. இந்த மாணவி எழுதுகிறாள்: இரண்டு மூன்று தடவை எனது பாரம் மறுக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் நீங்கள் முஸ்லிம் என்று எழுத வேண்டும் என்று கூறியுள்ளார்கள். நான் முஸ்லிம் என குறிப்பிட்ட பகுதியில் டிக் செய்தால், பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை இழிவாக ஏச வேண்டும் என்று உள்ள பகுதியில் நாம் கையெழுத்திட மறுக்கும் போது நமது அட்மிஷன் மறுக்கப்படுகிறது.

எனவே இந்த கடுமைகள், நன்றாக படிக்கக்கூடிய திறமைமிக்க பள்ளி மாணவர்களின் மீது இன்றும் நடக்கின்றன.

அன்று அங்கிருந்த பிரின்ஸிபல் நேர்மையானவராக இருந்தார். மேலும் கொஞ்சம் நேர்மையாக செயல்பட்டால் அதன் மூலம் அவர்கள் மீது தொடுக்கப்பட்ட கடுமைகள் குறைந்தன. ஆனால் இன்று அரசாங்க சட்டங்களின் கீழ் இந்த அநீதி இழைக்கப்படுகின்றது. எல்லை மீறி இழைக்கப்படுகின்றது. இதுபோன்ற பல பிள்ளைகள் இதனால் பாதிக்கப்படுகின்றனர். மேலும் இந்த அநீதி தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. இந்த அநீதியுடன் இறை அருளால் இன்று இருக்கக்கூடிய இளைஞர்களுடைய ஈமான் வலுப்பெறுகின்றது.

இதனைப்போன்றே மெஹர் குலாம் ஹஸன் சாஹிப் அவர்கள் தனது பைஅத் சம்பவத்தைப் பற்றி கூறுகின்றார்கள்:

நானும், மவ்லவி ஃபைஸ்தீன் சாஹிபும் உட்கார்ந்திருந்தோம். அப்போது ரஹீம் ஃபக்ஸ் என்ற பெயரைக் கொண்ட தர்தி சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் இங்கு வந்தார். மவ்லவி சாஹிப் இன்று நான் மிகவும் குழப்பத்தில் உள்ளேன் என்றார். நான் அவரிடம் என்ன காரணம் எனக் கேட்டேன். அதற்கு அவர் கூறினார். ஹமித்ஷா ஒரு மலக்கு போன்றவராவார். ஓர் இறை தொடர்புடைய மனிதராவார். இந்துக்களும், முஸ்லிம்களும் அவரைப் புகழ்கின்றனர். இந்துவாக இருந்தாலும் சரி, முஸ்லிமாக இருந்தாலும் சரி அனைவரும் அவரை புகழ்கின்றனர். இன்று அவரிடம் ஒரு மாபெரும் தவறு ஏற்பட்டு விட்டது. இன்று அவர் தனது மாமா உமர் ஷாவிடம், மாமா நீங்கள் இப்னு மர்யமைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள் எனக் கேட்டார். அதற்கு அவர் ஈஸா (அலை) வானத்தில் உயிருடன் இருக்கிறார் என்பதுதான் எனது கொள்கையாகும் என்றார். மேலும் முஹம்மதிய்ய உம்மத்தை சீர்திருத்துவதற்காக ஒரு நாள் வருவார் என்றார்.

ஷா சாஹிப் கூறினார். மாமு சாஹிப், இனிமேல் நீங்கள் எனக்கு இமாமாக இருக்க முடியாது. ஏனென்றொல் ஒரு மனிதனை எப்போதும் உயிருடன் இருப்பதாகவும், அழிவு இல்லாதவராகவும் கருதுவது ஒரு முஷ்ரிகின் கொள்கையாகும். இரண்டாவது விஷயம், ஸெய்யது மவ்லா ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இந்தக் கொள்கையின் மூலம் மிகப்பெரிய இழிவு ஏற்படுகின்றது. அன்னார் பூமியில் அடக்கப்பட்டிருக்கும் போது ஹஸ்ரத் ஈஸா வானத்திற்கு உயர்த்தப்படுவது என்பது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இழிவுபடுத்துவதாகும். அப்போது உமர் ஷா இனிமேல் நீங்கள் முன்பு நில்லுங்கள்; நான் பின்னால் நிற்கின்றேன் என்று கூறினார்.

எனவேஇந்த விஷயங்களைக் கேட்டதும், நான் கூறினே. மவ்லவி சாஹிப் நான் ஈஸா இறந்து விட்டார் என ஏற்றுக் கொள்கிறேன். ஈஸா நபி உயிருடன் இருந்தால் தவ்ஹீதிற்கு மாபெரும் பாதிப்பு ஏற்படும். நீங்கள் என்னை அஹ்மதி என கருத வேண்டாம். நான் தற்போது வரை அஹ்மதி கிடையாது. ஆனால் மிர்ஸா சாஹிபுடைய இந்த விஷயம் நிச்சயம் உண்மையாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இழிவுபடுத்துவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என கூறினேன். அப்போது மவ்லவி சாஹிப் எனது வாயை கைகளால் அடைத்தார்கள். நான் மவ்லவி சாஹிப், ஏன் தடுக்கின்றீர்கள்? என்றேன். மவ்லவி சாஹிப் கூறினார். உங்களுக்கு மஸீஹ் இறந்து விட்டார் என நம்பிக்கை வந்து விட்டது என்றால், அதற்கு இந்த அளவு உணர்ச்சியை வெளிப்படுத்த வேண்டிய அவசியம் என்ன? நீங்கள் அவ்வாறு நம்பிக்கை கொண்டீர்கள் என்றால், அமைதியாக இருங்கள் என்றார். அதற்கு நான், மவ்லவி சாஹிப், நான் பள்ளிவாசலில் இருந்து வெளியே சென்ற உடனே இதனை அறிவித்தவாறு செல்வேன் என்றேன். அதாவது ஈஸா (அலை) அவர்கள் வானத்தில் இருக்கின்றார் என்றால் இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை இழிவுபடுத்துவதாகும். இதனை எனது உயிர் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது. நான் வீட்டிற்குச் சென்றதும் எனது தந்தைக்கு இதனை புரிய வைத்தேன். பிறகு எனது மூத்த சகோதரர் இமாம் ஹுஸைன் ஆரிப்வாலாவுடைய அமீர் ஜமாஅத் ஆவார். இவர் அப்போது அஹ்மதி ஆகவில்லை. இவர்கள் இருவரும் இதனைக் கேட்டதும் மிக அதிகமாக கோபம் அடைந்தார்கள். மேலும் எனக்கு தஜ்ஜால், மல்ஊன் என பெயர் வைத்தனர்.

கூறுகின்றார்கள்: நாளை என் மீது மவ்லவிகள் தாக்குதல் நடத்துவார்கள் என எனக்கு சிந்தனை தோன்றியது. அப்போது நான் எந்த அஹ்மதியை நாங்கள் பள்ளிவாசலிலிருந்து தடுத்தோமோ அவரை ஒரு வேலைக்காரன் மூலமாக அழைத்து வர செய்தேன். இவர் அப்போது அஹ்மதியாகவில்லை. ஆனாலும் தனது கொள்கையைப் பற்றி கூறுகின்றார்: இவ்வாறு தனது கொள்கையைப் பற்றி தந்தை மற்றும் சகோதரனிடம் கூறிய போது, ஏச்சுக்கள் தான் இவருக்கு கிடைத்தது. மேலும் மவ்லவிமார்களும் இவரை விடமாட்டார்கள். அப்போது நான் பள்ளிவாசலிலிருந்து யாரை வெளியேற்றினேனோ அந்த அஹ்மதியை அழைத்து வரச் செய்தேன். நான் அவரிடம் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் அவர்கள் மஸீஹின் மரணத்திற்கு ஏதாவது ஆதாரம் தந்துள்ளார்களா? அல்லது வெறுமனே கூறினார்களா என்றேன்.

அதற்கு அவர் 30 வசனங்களைக் காட்டினார்கள் எனக் கூறினார். அப்போது நான் மிகவும் ஆச்சரியத்துடன் கூறினேன். நாம் இரவு பகலாக திருக்குர்ஆனை ஓதுகின்றோம். ஆனால் நமக்கு இது தென்படவில்லை? எப்படி இது? எங்களுக்கு ஒரே ஒரு வசனத்தை மட்டும் கூறுங்கள் என்றேன். அதற்கு அவர் ஏழாவது பாகத்தின் வசனமான ஃபலம்மா தவஃப்பைத்தனி –யைக் கூறினார். அப்போது நான் திருப்தி அடைந்து விட்டேன் என்றேன். மேலும் என்னுடன் எந்த மவ்லவியும் போட்டியிட முடியாது எனக் கூறினேன்.

ஃபஜ்ர் நேரத்தில் மவ்லவி குலாம் ஹுஸைன் சாஹிப், மவ்லவி ஃபைஸலுத்தீன் மேலும் இரண்டு மூன்று நபர்கள் எனது சகோதரருடன் வந்தார்கள். நான் பள்ளிவாசலின் கதவருகில் நின்று கொண்டிருந்தேன். அவர்கள் பள்ளிவாசலுக்கு வந்தடைந்தார்கள். மவ்லவி குலாம் ஹுஸன் சாஹிப் அவர்கள் நீங்கள் ஏன் மஸீஹிற்கு எதிரியாய் இருக்கிறீர்கள் எனக் கேட்டார். அதற்கு நான் என்ன எதிர்த்தேன்? எனக் கேட்டேன். அதற்கு அவர் கூறினார். உங்களுடைய சகோதரர் நீங்கள் மஸீஹ் இறந்து விட்டார் என கொள்கை கொண்டுள்ளதாக கூறினார் என்றார். அதற்கு நான் மஸீஹ் தமது மரணத்தை தாமே ஒப்புக் கொண்டுள்ளாரே என்றேன். உங்களது உதாரணம் வாதி சோம்பேறி, ஆனால் சாட்சிகள் சுறுசுறுப்பு என்ற பழமொழிக்கேற்ப உள்ளது என்றேன்.

அதற்கு மவ்லவி சாஹிப், எங்கு மஸீஹ் இறந்து விட்டதாக தானே ஒப்புக் கொண்டதாக எழுதியிருக்கிறது? என்றார். நான் திருக்குர்ஆனில் உள்ளது என்றேன். அதற்கு அவர் எந்தக் குர்ஆன்? மிர்ஸா சாஹிப் உருவாக்கிய குர்ஆனா? என்றார். நான் கூறினேன். மவ்லவி சாஹிப் கொஞ்சம் நிதானமாகப் பேசுங்கள். நீங்கள் இறைவன் மீது ஆட்சேபனை செய்கின்றீர்கள். அல்லாஹ் எனது வேதத்தை உங்களால் ஒருபோதும் உதாரணத்தைக் கொண்டு வர முடியாது என்று கூறுகின்றான். ஆனால் மிர்ஸா சாஹிப் குர்ஆனை உருவாக்கியுள்ளார் எனக் கூறுகின்றீர்கள். கொஞ்சமாவது சிந்தனை செய்யுங்கள் என்றேன். அதற்கு மவ்லவி சாஹிப் எங்கு எழுதப்பட்டுள்ளது என கேட்டார். நான் ஏழாவது பாகத்தின் வசனத்தினை படித்தேன்.

அப்போது அவர் கூறினார். நாங்கள் உமக்கு ஒரேயொரு வழியினை கூறுகின்றோம். அதாவது இந்த நம்பிக்கை கெட்டவருடன் அதாவது அஹ்மதிகளுடன் பேசாதீர்கள். அப்போது தான் நீங்கள் தப்பிப்பீர்கள். இதனைத் தவிர வேறு வழியில்லை. அது மட்டுமல்ல. அவர்களுடன் பார்வையுடன் பார்வை கோர்க்காதீர்கள். அப்போது தாக்கம் ஏற்படுவதற்கு வாய்பபு உள்ளது. இந்த இரண்டு வழியினையும் பின்பற்றினால் நீங்கள் தப்பித்துக் கொள்வீர்கள். அதற்கு நான் மவ்லவி சாஹிப் உண்மையின் தாக்கமும் அவ்வாறு தான் ஏற்படும். நீங்கள் கூறக்கூடிய வழிகள் யாவையும் உண்மையின் அடையாளங்கள் ஆகும். மவ்லவி சாஹிப் திரும்பிச் சென்று விட்டார்கள். எனது எதிரியாக இருந்த எனது சகோதர் நிரோப்பி சென்று விட்டார். நான் பைஅத் செய்து விட்டேன். தந்தைக்கும், மனைவிக்கும் இதனை புரிய வைத்து விட்டேன். எனவே அனைவருக்கும் புரிய வைத்தேன். எனது சகோதரருக்கு நிரோப்பி சென்று தான் புரிய வந்தது. அவர் 10 மாதங்கள் கழித்து வந்து பைஅத் செய்தார். அவர் இதனை எழுதும்போது தற்போது இறையருளால் எங்களது சுற்றுப்புறத்தில் 100, 150 அஹ்மதிகள் உள்ளனர் என எழுதுகிறார்.

இன்றும் இதனைத்தான் மக்களுக்கு கூறப்படுகின்றது. இவர்களுடன் பேசாதீர்கள். இவர்களுடைய பார்வையுடன் பார்வை கோர்க்காதீர்கள் எனக் கூறப்படுகின்றது. இது இன்றைய விஷயம் கிடையாது.

மாறாக, இன்றிலிருந்து ஏறக்குறைய 1400 வருடங்களுக்கு முன்பு இதுதான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வாதம் புரியும் போதும் கூறப்பட்டது. துபைல் பின் அமர் அத்தோஸி உடைய பிரபல்யமான சம்பவம் ஒன்று வருகிறது.

அவர்கள் கூறுகின்றார்: நான் மக்காவுக்கு வந்த போது குறைஷிகள் என்னிடம் கூறினார்கள். நீங்கள் மிகவும் கண்ணியமிக்க ஒரு தலைவர் மற்றும் புத்திசாலியான கவிஞர் ஆவீர்கள். நீங்கள் எங்களது நாட்டிற்கு வந்ததனால் நாங்கள் உமக்கு இதனைக் கூற விரும்புகின்றோம். அதாவது ஒரு மனிதர் எங்கள் மத்தியில் வாதம் புரிந்துள்ளார். மேலும் எங்களுக்கு இடையில் பிளவை ஏற்படுத்தி விட்டார். மேலும் அவர் எங்களை

கெடுத்து விட்டார். அவருடைய பேச்சில் மந்திரம் இருக்கிறது. அதன் மூலம் தந்தையும், மகனும், சகோதரர்களும், கணவன், மனைவியும் தனித்தனியாகி விடுவார்கள். மேலும் நீங்கள் இவருடைய பேச்சினை கேட்பதனால் உங்களுக்கும் உங்களுடைய சமுதாயத்தினருக்கும் எங்களிடம் ஏற்பட்டுள்ள இந்த நிலைமை ஏற்பட்டு விடக்கூடாது என அஞ்சுகிறோம் என்றனர். எனவே அந்த மனிதருடன் பேசக்கூடாது. மேலும் அவருடைய பேச்சைக் கேட்கவும் கூடாது என்றனர்.

கூறுகின்றார்கள்: எந்த அளவு காஃபிர்கள் வற்புறுத்தினார்கள் என்றால், நான் ஒருபோதும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பேச்சைக் கேட்கமாட்டேன் என முடிவெடுத்தேன். எந்த அளவுக்கென்றால் பள்ளிக்கு அதாவது கஃபா சென்ற போது அன்னாருடைய வார்த்தைகள் என் காதுகளில் விழுந்துவிடக் கூடாது என்பதற்காக காதுகளை பஞ்சை வைத்து அடைத்திருந்தேன். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கஃபாவில் தொழுகையில் மூழ்கியிருந்தார்கள். நான் அருகில் சென்று நின்றேன். இறை நியதி அன்னாரின் சில வார்த்தைகளை என்னைக் கேட்கும்படி செய்தது. அது எனக்கு நன்றாக இருந்தது. அப்போது நான் எனது உள்ளத்தில் நினைத்தேன். நாசமகாட்டுமாக! நீ ஒரு அறிவுள்ள புத்திசாலியான மனிதரும் ஒரு கவிஞரும் ஆவாய். நல்லது கெட்டதை அறியக்கூடியவன் ஆவாய். இந்த மனிதருடைய கருத்துக்களை கேட்க வேண்டும். அது நல்லதாக இருந்தால் ஏற்றுக் கொள்ள வேண்டும். அது தீயதாக இருந்தால் அதனை மறுத்து விட வேண்டும் என கூறிக் கொண்டேன். நான் அங்கு சிறிது நேரம் நின்று கொண்டிருந்தேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தொழுகையை முடித்து விட்டு, தனது வீட்டை நோக்கிச் சென்றார்கள். நானும் அவர்களுக்கு பின்னால் சென்றேன். அன்னார் வீட்டைச் சென்றடைந்ததும் நான் அன்னாரின் அருகில் வந்தேன். மேலும் கூறினேன். ஏய் முஹம்மது! (ஸல்). உங்களடைய சமுதாயம் உங்களைப் பற்றி என்னிடம் இவ்வாறெல்லாம் கூறியது. மேலும் என்னை எந்த அளவு வற்புறுத்தினார்கள் என்றால் உங்களது வார்த்தை காதுகளில் விழுந்துவிடக் கூடாது என நான் பயத்தினால் எனது காதுகளை பஞ்சை வைத்து அடைத்துக் கொண்டேன். ஆனால் இறை நியதி உங்களுடைய சில வார்த்தைகளை என்னைக் கேட்கும்படி செய்து விட்டது. அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. மேலும் உங்களுடைய கருத்துக்களை கேட்க விரும்புகின்றேன் என்றேன். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தினைப் பற்றி கூறினார்கள். திருக்குர்ஆனை ஓதிக் காட்டினார்கள்.

அவர் கூறுகின்றார்: இறைவன் மீது ஆணையாக! இதுபோன்ற அழகிய கலாமை நான் ஒருபோதும் கேட்டதில்லை என்றார். மேலும் இதனை விட சிறந்தது வேறில்லை எனக் கூறி அவர் கலிமா சொல்லி இஸ்லாத்தினை ஏற்றுக் கொண்டார்.

எனவே எப்போதும் இதுதான் எதிரிகளின் நடைமுறையாக இருந்து வருகின்றது. மந்திரம் செய்யப்பட்டது என்றால் அது எதிரிகளின் புறமிருந்து தான் செய்யப்பட்டுள்ளது. நபிமார்கள் மூலமாக ஒருபோதும் செய்யப்பட்டதில்லை. அல்லாஹ் மந்திரம் ஒருபோதும் வெற்றி அடையாது என உறுதியுடன் வாக்குறுதி அளித்துள்ளான். மேலும் அவர்களுடைய பார்வையில் இந்த மந்திரம் வெற்றி பெறுகிறது என்றால் திருக்குர்ஆனுடைய ஆதாரங்கள் அடிப்படையில் இது மந்திரம் இல்லை. மாறாக, இது உண்மை ஆகும். இதனை இவர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதனைப்போன்றே ஹஸ்ரத் கலீஃபா நூருத்தின் சாஹிப். இவர் ஜம்முவைச் சேர்ந்தவராவார். கலீஃபா நூருத்தீன் என இவர்கள் அழைக்கப்படுவார்கள். இவர் எழுதுகிறார்கள்.

நான் மவ்லவி அப்துல் வாஹிது சாஹிப் கஸ்னவிக்கு ஒரு வருடம் வரை புரிய வைத்துக் கொண்டிருந்தேன். அப்போது அவர் கூறினார். உலமாக்கள், மிர்ஸா சாஹிப் மீது குஃப்ர் ஃபத்வா கொடுத்திருக்கிறார்கள் என்றார். அதற்கு நான் உமது தந்தையார் மீதும் தான் மவ்லவிகள் குஃப்ர் ஃபத்வா கொடுத்திருக்கிறார்கள் என்றேன். இதற்கு ஒரு மவ்லவி சாஹிப் ஏறக்குறைய மவ்லவி முஹம்மது லக்கூகே வாலே பற்றி கூறினார். அவருக்கும் இல்ஹாம்கள் இறங்குகின்றன என்றார். மேலும் அவரிடம் மிர்ஸா சாஹிபுடைய வாதம் பற்றி இறைவனுடைய கட்டளை என்ன என்பதை அவரிடம் எழுதிக் கேட்போம் என்றார். ஒரு மாதம் கழித்து அந்த மவ்லவியிடமிருந்து பதில் வந்தது. அதில் மவ்லவி சாஹிப் எழுதியிருந்தார். நான் துஆ செய்தேன். இறைவன் புறமிருந்து மிர்ஸா சாஹிப் காஃபிர் என எனக்கு பதில் வந்தது என்றார். நான்

பத்ர்வாவிற்கு ஒரு பணியின் காரணமாக சென்றிருந்தேன். நான் திரும்ப ஜம்மு வந்தபோது எனக்கு அந்த கடிதம் காண்பிக்கப்பட்டது. அப்போது நான் கூறினேன். இந்த இல்ஹாமை இறக்கக்கூடிய இறைவன் மிகவும் கோழையான இறைவன் ஆவான் (நவூதுபில்லாஹ்). அவன் மிர்ஸா சாஹிபை காஃபிர் என்றும் கூறுகின்றான். மேலும் அவரை சாஹிப் என்றும் கூறுகின்றான். இந்த ஒரு சிறந்த தர்க்கத்தை அவர்கள் கூறினார்கள். ஒருபுறம் மிர்ஸா சாஹிப் காஃபிர் என்றும், மறுபுறம் சாஹிப் என்றும் கண்ணியமிக்க வார்த்தையுடனும் கூறுகின்றான். இப்படிப்பட்ட இறை இல்ஹாம் மீது என்ன நம்பிக்கை வைக்க முடியும். இவ்வாறு சின்னச் சின்ன விஷயங்கள் மூலம் பல கருத்துகளை எடுத்து வந்தார்கள்.

அடுத்து ஹக்கீம் அப்துல் கனி சாஹிபின் மகன் ஹக்கீம் அப்துஸ் ஸமது கான் சாஹிப். இவர் டில்லியைச் சேர்ந்தவராவார். இவர் எழுதுகிறார்கள். இவர் 1905ல் பைஅத் செய்தார். நான் 1891-ல் ஒரு மவ்லவியிடம் ஜலாலைன் படித்து வந்தேன். அப்போது அதில் யா ஈஸா இன்னி முதவஃப்பீக்க வராஃபிஉக்க இலைய்ய என்ற வசனத்திற்கு விளக்கவுரையில் ராஃபிஉக்க இலைய்ய என்பதற்கு மரணிக்காமல் வானத்திற்கு உயர்த்தப்படுதல் என எழுதியிருந்தது. இதனைப் பார்த்து நான் வியந்து போனேன். இவ்வாறு இந்த வார்த்தை எங்கு கூறப்பட்டுள்ளது. மேலும் இது வசனத்திற்கு விளக்கமா? அல்லது வசனத்திற்கு போட்டியாக உள்ளதா? என்று இதனை சிந்தனை செய்தவாறு இரவு 2.00 மணி ஆனது. அப்போது எனது தந்தை விழித்தார். மேலும் இவ்வளவு நேரம் தூங்காமல் இருப்பதற்கான காரணம் கேட்டார். நான் உண்மையான காரணத்தைக் கூறினேன். அப்போது கூறினார்கள். மியான் ஆசிரியர்கள் எதற்காக இருக்கிறார்கள்? நீ தூங்கு. காலையில் சென்று மவ்லவி சாஹிபிடம் இதற்கான விடையை தெரிந்து கொள் என்றார். பிறகு நான் காலையில் மவ்லவி சாஹிபிடம் சென்று, சம்பவம் அனைத்தையும் கூறினேன். அதற்கு மவ்லவி சாஹிப் கூறினார். மியான்? முன்னோர்கள் முதல் பின்னவர்கள் வரை அனைவரும் இதனைத்தான் கொள்கையாக கொண்டு வந்துள்ளார்கள். இதில் பிரச்சனை எதுவும் செய்யாதே என்றார். அதாவது ஆரம்பத்தில் இருந்தே இந்த கொள்கைகள் தான் இருந்து வருகிறது. இதனை விட்டு விடு என்றார். எனக்கு எப்போது வரை புரியாதோ அப்போது வரை நான் அடுத்ததைப் படிக்க மாட்டேன் என்றேன். இதனால் அவர் அதிகமாகக் கோபமடைந்தார்.

மேலும் எனது தந்தையை அழைத்து வருமாறு கூறினார். எனது தந்தை கூறினார். நீங்கள் ஆசிரியர் ஆவீர்கள். இவன் மாணவன் ஆவான். நான் இவனை உங்களிடம் படிப்பதற்காக அனுப்பியுள்ளேன். நீங்களே இதனைப் பார்த்துக் கொள்ளுங்கள். இதில் நான் ஒருபோதும் தலையிடமாட்டேன் என்றார். இதனை கூறிய பிறகு எனது தந்தை சென்று விட்டார். மவ்லவி சாஹிப் என்னிடம் மீண்டும் படிக்கும் படி கூறினார். நான், எப்போது வரை எனக்கு புரிய வைக்கமாட்டீர்களோ, நான் எவ்வாறு தொடர்ந்து படிப்பேன் என்றேன். இதன் காரணமாக மவ்லவி சாஹிபிற்கு கோபம் வந்தது. அவர் என்னை அறைந்தவாறு உனக்கு பைத்தியம் பிடித்திருக்கிறது. ஒன்று உனக்கு பைத்தியம் பிடித்திருக்கிறது. மற்றொன்று மிர்ஸாவுக்கு பைத்தியம் பிடித்திருக்கின்றது என்றார். அப்போது இந்த மிர்ஸா யார் என ஆச்சரியப்பட்டேன். அப்போது அவர் மஸீஹ் மவ்வூது பற்றியும், அவரது தூதுச் செய்தி என்ன என்பது பற்றியும் அறியாமல் இருந்தார். நான் அப்போது மிர்ஸா யார் என ஆச்சரியப்பட்டேன்? மேலும் இதனைத் தொடர்ந்து நான் ஏதோவொரு உண்மையில் இருக்கின்றேன் என உள்ளத்தில் தோன்றியது. இது எனது சிந்தனை கிடையாது. மாறாக இதற்கு வேறொரு அடிப்படை இருக்கிறது. எனது உள்ளத்தில் தோன்றிய சிந்தனை போல் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர் என எனக்கு தோன்றியது. எனவே நான் நேரத்தை வீணடிக்காமல் மவ்லவி சாஹிபிடம் நீங்கள் எப்போது வரை எனக்கு புரிய வைக்கமாட்டீர்களோ அப்போது வரை நான் தொடர்ந்து படிக்கமாட்டேன் என்றேன். இது மார்க்கம் ஆகும். மார்க்கத்தில் எந்தவித பலவந்தத்திற்கும் அனுமதி கிடையாது என்றேன். இன்று நீங்கள் ஒரு அறை அறைந்து உங்களின் கொள்கைக்கேற்ப என்னை ஆக்கிக் கொள்வீர்கள். நாளை வேறொரு மவ்லவி சாஹிப் இரண்டு அறை அறைந்து இதற்கு மாற்றமாக என்னை மாற்றி விடுவார். நாளை இன்னொருவர் மூன்று அறை அறைந்து இதற்கு மாற்றமாக என்னை ஆக்கி விடுவார். இது என்ன கேலியாக இருக்கிறது? நான் ஒருபோதும் படிக்கமாட்டேன். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் வெறுமனே அவர்கள் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்கவில்லை. மாறாக பழைய மக்கள் ஒவ்வொரு விஷயத்திலும் மிகவும் ஆழமாக சிந்தித்துள்ளார்கள்.

கூறுகின்றார்கள்: இந்த பிரச்சனையில் 11.00 மணி ஆகி விட்டது. நான் படிக்க மாட்டேன் என்றேன். எனவே படிக்கவும் இல்லை. மாலையில் வேறொரு ஆசிரியரிடம் சென்றேன். அவரும் கூறினார். ஒன்று உனக்கு பைத்தியம் பிடித்திருக்கின்றது. மற்றொன்று மிர்ஸாவுக்கு பைத்தியம் பிடித்திருக்கின்றது என்றார். பிறகு அவரும் அதே விஷயத்தை திரும்பவும் கூறினார். ஒன்று நீ மட்டும் தான் இந்த விஷயத்தைப் பேசுகின்றாய். மற்றொன்று இன்னொரு மனிதர் அதாவது மஸீஹ் மவ்வூது பற்றி கூறினார். இதிலிருந்து எனது உள்ளம் இன்னும் உறுதியாகி விட்டது. நான் கூறிய விஷயங்கள் பலவீனமானவை கிடையாது. பிறகு மூன்றாவது ஆசிரியர் மவ்லவி அப்துல் வஹ்ஹாப் சாஹிபிடம் சென்றேன். அவர் இது மிகப்பெரிய ஒரு கதையாகும் என்றார். மேலும் இதற்கான வாதம் புரியக்கூடியவர் உயிருடன் தான் இருக்கிறார். அவர் ஈஸா நபி இறந்த விட்டார் எனக் கூறுகின்றார். மேலும் எந்த ஈஸா வருவதை மக்கள் எதிர்பார்க்கின்றார்களோ அது நானே ஆவேன் என கூறுகிறார். அதற்கு நான் கூறினேன். முதல் விஷயம் எனக்கு புரிந்து விட்டது. ஆனால் இரண்டாவதைப் பற்றி எனக்கு தெரியவில்லை என்றேன். அவர் கூறினார். நான் பஞ்சாப் சென்றிருந்தேன். அங்கு 22 நாட்கள் தங்கியிருந்தேன். அன்னாரது ஒரு சீடர் மவ்லானா நூருத்தீன் ஆவார். மருத்துவத்தில் அவருக்கு யாரும் இணையில்லை. நான் அன்னாரது மார்க்க தர்ஸ்களையும் கேட்டிருக்கின்றேன். பெரிய பெரிய மவ்லவிகள் கூட அவருக்கு முன்னால் பேச முடியாது. அவர் தனது பைஅத்தைப் பற்றி எதுவும் கூறவில்லை. மவ்லவி சாஹிப் பைஅத் செய்து தான் வந்திருந்தார்கள். ஆனால் இந்த இளைஞனுக்கு முன்பு அதனை வெளிப்படுத்தவில்லை. ஏனென்றால் மவ்லவி சாஹிப் எதிர்ப்பிற்கு அஞ்சினார்கள். என்னிடம் கூறினார்கள். சத்தமாகப் பேசாதே. மவ்லவி அப்துல் கஃபூர் சாஹிப் கேட்டு விடுவார்கள். இவர் மற்றொரு அஹ்மதியல்லாத ஒரு மவ்லவி ஆவார். அவர் கேட்டு விடுவார் என கூறினார்கள். எனக்கு இதனைப் பற்றி எவ்வித கவலையும் இல்லை. உண்மையை வெளிப்படுத்தவதிலிருந்து நான் எவ்வாறு தவிர்ந்து நிற்பேன் என்றேன்.

எனவே இதனைப் படித்தவாறு அதாவது படிப்பை தொடர்ந்தவாறு 1905 ஆம் ஆண்டு வந்தது என்கிறார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் டில்லி சென்றார்கள். அல்ஃப் கான் சாஹிபுடைய பெரிய வீட்டில் தங்கினார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் அன்னாரை சந்திப்பதற்காக வந்திருந்தார்கள். நான் எதிரி மவ்லவிகளுடன் சென்றிருந்தேன். அதில் அதிக அளவு மாணவர்கள் இருந்தார்கள். எங்களுடைய தலைவராக மவ்லவி முஷ்டாக் அலி சாஹிப் இருந்தார்கள். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது சில ஆட்சேபனைகளைக் கேட்க ஆரம்பித்தார். அதற்கு ஹஸ்ரத் சாஹிப் கூறினார்கள். கொஞ்சம் பொறுங்கள். ஹஸ்ரத் முஃப்தி சாதிக் சாஹிபிடமிருந்து பேனா, பேப்பர் வாங்கி ஒரு கட்டுரை எழுதினார்கள். இதனை மவ்லவி முஷ்டாக் அலி சாஹிப் இடம் கொடுத்து முதலில் படியுங்கள். மேலும் அதில் ஏதாவது ஒரு வார்த்தை புரியவில்லையென்றால் என்னிடம் கேளுங்கள். அதனைத் தொடர்ந்து அதற்குரிய பதிலையும் தாங்கள் எழுதுங்கள் என்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அங்கேயே சிறியதாக ஒரு கட்டுரை எழுதினார்கள். அதனை அஹ்மதி அல்லாத அந்த மவ்லவியிடம் கொடுத்தார்கள். இதனை படியுங்கள். புரியவில்லை என்றால் என்னிடம் கேளுங்கள். மேலும் நான் எழுதிய கட்டுரைக்கு அதனைத் தொடர்ந்து அதற்கு பதில் எழுதுங்கள் என்றார்கள். மேலும் ஹஸ்ரத் சாஹிப் மவ்லவி சாஹிபிடம் கூறினார்கள். நீங்கள் முதலில் எனது கட்டுரையைப் படித்துக் காட்டுங்கள். பிறகு அதற்குரிய பதிலை எழுதி, அதனையும் படித்துக் காட்டுங்கள் என்றார்கள். மவ்லவி சாஹிப் பதில் எதுவும் எழுதாமல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கட்டுரையைப் படிக்க ஆரம்பித்தார். ஹஸ்ரத் சாஹிப் மீண்டும் கூறினார்கள். நீங்கள் பதில் எழுதி விட்டுப் படித்தீர்கள் என்றால் மிக நல்லதாக இருந்திருக்கும். இதற்குரிய பதிலை எழுதியிருந்தீர்கள் என்றால் நேரம் வீணாகாது என்றார்கள். அதற்கு அந்த மவ்லவி அதனைக் கேட்காமல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கட்டுரையைப் படிக்க ஆரம்பித்தார். பிறகு இதற்கு நானே வாயாலேயே பதில் கூறுவேன் என்றார். உங்களது கட்டுரைக்கு எழுத்து மூலம் பதில் எழுத வேண்டிய அவசியம் இல்லை என்றார். இவ்வாறு அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கட்டுரையைப் படித்துக் காட்ட ஆரம்பித்தார். கட்டுரை முழுவதையும் படித்துக் காட்டிய பிறகு வெகு நேரமாக பதில் கூற முடியாமல் அமைதியாக நின்றார். அருகில் இருந்த மாணவர்களில் ஒரு சிலர் கூறினார்கள். எங்களுக்கு உங்களால் இதற்கு பதில் கூட முடியாது என

தெரிந்திருந்தால் நாங்கள் வேறொருவரை தலைவராக ஆக்கியிருப்போம் என்றனர். நீங்கள் எங்களையும் கேவலப்படுத்தி விட்டீர்கள் என்றனர். இதனால் மவ்லவி சாஹிப் ஒரு மாணவனை அறைந்தார். பதில் சொல்ல முடியவில்லை. கோபத்தால் மாணவனை அறைந்து விட்டார். அந்த மாணவன் மவ்லவி சாஹிபை அறைந்தான். அஹ்மதியாகிக முஃப்தி முஹம்மது சாதிக் சாஹிப் இந்த இரண்டு பேரின் சண்டையைத் தடுத்து நிறுத்தினார்கள். இதற்கு பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உரை ஆரம்பமானது. ஹஸ்ரத் சாஹிபின் உரையின்போது சில மக்கள் கூச்சலிட்டனர். ஜமாஅத் மக்கள் ஹஸ்ரத் சாஹிபை சுற்றி வளைத்து நின்றனர். அதில் கொஞ்சம் இடைவெளி இருந்தது. அவர் கூறுகின்றார். அதில் நான் சென்று நின்று கொண்டேன். இவர் அப்போது அஹ்மதி ஆகவில்லை. அக்பர் கான் என்ற ஓர் அஹ்மதி பணியாளர், என்னை எதிரி என நினைத்து என்னை அங்கிருந்து தள்ளி விட்டார். சிறிது நேரத்திற்குப் பிறகு மீண்டும் நான் அங்கு சென்று நின்று கொண்டேன். அப்போது உள்ளத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பற்றி அன்பு கொஞ்சம் ஏற்பட்டது. யாரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு தீங்கு ஏற்படுத்தி விடக்கூடாது என நினைத்து காலியான இடத்தைத் தேடி அங்கு நின்று கொண்டேன். பிறகு அக்பர் சாஹிப் மீண்டும் என்னை பின்னுக்குத் தள்ள முயன்றபோது ஹஸ்ரத் நூருத்தீன் சாஹிப் (முதல் கலீஃபத்துல் மஸீஹ்) அவர்கள் ஏன் அவரை பின்னுக்குத் தள்ளுகின்றீர்கள் எனக் கேட்டார்கள். அதற்கு அக்பர் சாஹிப் இவர் எதிரி ஆவார் எனக் கூறினார்கள்.  அதற்கு ஹஸ்ரத் ஹக்கீம் நூருத்தீன் சாஹிப், நீங்கள் அவரது உள்ளத்தைக் கிழித்துப் பார்த்தீர்களா? என்றார்கள். யார் வருகின்றார்களோ அவரை வரவிடுங்கள் என்றார்கள்.

இதற்குப் பிறகு மவ்லவி சமரிய்யா வாலா எழுதுகின்றார். சமரிய்யா வாலா என்பது ஒரு மவ்லவியுடைய பெயராகும். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது பற்றி சில கெட்ட வார்த்தைகளைப் பேசினார். அப்போது நன் ஏய் சமரிய்யா வாலே, ரொம்ப அதிகமாகப் பேசினாய் என்றால் உன்னுடைய நாக்கைப் பிடித்து இழுத்து விடுவேன் என்றேன். இதற்கு ஹாஃபிஸ் அப்துல் மஜீத் சாஹிப் அவரை தடுத்தார். இப்போது தமது நிலைமை மோசமாகிக் கொண்டே செல்கிறது. எனவே நமது மக்கள் வரம்பு மீறாதீர்கள். அமைதியாக இருங்கள் என்றார். நமது மக்களே வழிகெட்டுப் போகிறார்கள் என்றல் நமது மக்களே நம்வர்களை அடிக்க ஆரம்பித்து விடுவார்கள். எனவே அமைதியாக இருங்கள் என்றார். எனவே மவ்லவி சாஹிப் நீங்கள் அமைதியாக இருங்கள் என்றார். பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது உரையில் அல்லாஹ் என்னை மஸீஹ் மவ்வூது ஆக அனுப்பியுள்ளான் என கூறினார்கள். மேலும் யாரெல்லாம் தனது குறைந்த அறிவின் காரணமாக என்னைப் பற்றி முடிவு எடுக்க முடியவில்லையோ அவர் இந்த துஆவை அதிகமாக ஓதுங்கள். இதனை அல்லாஹ் அவர்களுடைய ஐவேளை தொழுகையிலும் ஓதும்படி கூறியுள்ளான். அதாவது இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம், ஸிராத்தல்லஸீன அன்அம்த அலைஹிம் நடக்கும் போதும், உட்காரும் போதும் எப்போதும் எல்லா நேரங்களிலும் இதனை அதிகமாக ஓதுங்கள்.  அதிகபட்சமாக 40 நாட்கள் வரை இதனை நல்லெண்ணத்துடன் ஓதினால் அல்லாஹ் அவர்கள் மீது உண்மையை வெளிப்படுத்துவான்.

அவர் கூறுகின்றார்: நான் உடனே அங்கேயே இதனை ஓத ஆரம்பித்தேன். ஒரு வாரம் முடிவதற்குள் என் மீது உண்மை திறக்கப்பட்டது. அவர் ஒரு கனவைப் பற்றி கூறுகின்றார். அதில், ஹாமித் தெருவிலுள்ள பள்ளிவாசலில் நான் இருக்கின்றேன். அங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வருகின்றார்கள். நான் ஹஸ்ரத் சாஹிபுடன் கை குலுக்குவதற்காக முயன்றேன். அப்போது பார்வையற்ற ஒரு மவ்லவி என்னை தடுத்தார். பிறகு வேறொரு பக்கத்திலிருந்து முயன்ற போது அந்த மவ்லவி அங்கிருந்தும் என்னை தடுத்து விட்டார். பிறகு மூன்றாவது முறையாக நான் முன் சென்று முஸாஃபா செய்ய முயன்ற போதும் மீண்டும் அவர் என்னை தடுத்தார். அப்போது எனக்கு கோபம் வந்தது. நான் அவரை அடிப்பதற்காக கையை ஓங்கினேன். இது அவரது கனவு ஆகும். அப்போது ஹஸ்ரத் சாஹிப் கனவில் கோபம் அடையாதீர்கள். அவரை அடிக்காதீர்கள் எனக் கூறினார்கள்.  நான் கூறினேன். நான் உங்களுடன் கை குலுக்க விரும்புகின்றேன். ஆனால் இவர் என்னை தடுக்கின்றார் என்றேன். அப்போது நான் கண் விழித்தேன். பிறகு நான் இதனை காலையில் அமீர் காஸிம் அலி சாஹிப், மவ்லவி மெஹ்பூப் அஹ்மத் சாஹிப் மற்றும் மிஸ்திரி காதிர் பக்ஷ் சாஹிப் ஆகியோரிடம் கனவைப் பற்றி கூறினேன். அமீர் சாஹிப் இதனை ஹஸ்ரத் சாஹிபிற்கு எழுதுமாறு கூறினார்கள். நான் இதனை எழுதினேன். மேலும் அதன் கீழே நான் இந்தக் கனவை ஹுஸுரிடம் பைஅத்

செய்தவாறு கருதுகிறேன் என எழுதுமாறும் கூறினார்கள். நானும் அவ்வாறே எழுதினேன். அஹ்மதியல்லாத மவ்லவி மஹ்பூப் அஹ்மது சாஹிப் கூறினார்கள். உமக்கு உன்னுடைய தந்தையைப் பற்றி தெரியுமல்லவா? அவர் உன்னை ஒரு நொடி கூட தனது வீட்டில் இருக்க அனுமதிக்க மாட்டார் தெரியுமா? என்றார்.

அதற்கு நான், இதனைப் பற்றி எனக்கு எந்த கவலையும் இல்லை என்றேன். பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்னுடைய பைஅத்தை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் எனக்கு உங்களுடைய பைஅத் ஒப்புக் கொள்ளப்பட்டது என்றும், ஒருவேளை உங்களை மிகவும் அதிகமாக எவராவது ஏசிப்பேசினாலும் நீங்கள் பார்வையை உயர்த்திக் கூட பார்க்காதீர்கள். எந்த அளவு திட்டினாலும் அதற்கு எந்த விதமான பதிலும் அளிக்கக் கூடாது என எழுதியிருந்தார்கள்.

பிறகு மீண்டும் நான் முந்தைய சம்பவத்தின் பக்கம் வருகின்றேன். (டில்லியில்) ஹஸ்ரத் சாஹிப் அவர்களின் உரைக்குப் பிகு ஹஸ்ரத் மவ்லானா ஹக்கீம் சாஹிப் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். அவர்களின் உரைக்குப் பிறகு அன்னாருடன் நான் கை குலுக்கினேன். மவ்லவி சாஹிப் என்னிடம் நீங்கள் மார்க்கத்தைப் பற்றி ஏதாவது படித்திருக்கின்றீர்களா? என கேட்டார்கள். நான் மிஷ்காத், ஜலாலைன் போன்றவற்றை படித்துள்ளேன் என்றேன். பிறகு மவ்லவி சாஹிப் ஃபிக்காவில் எதுவரை படித்துள்ளார்கள் என கேட்டார்கள். அதற்கு நான் குதுஸி இன்னொரு நூலையும் கூறுகின்றார்கள். அதனை சரியாகப் படிக்க முடியவில்லை. ஏனென்றால் இந்த அறிவிப்புகள் கைகளால் எழுதப்பட்டவை ஆகும். எனவே சிலவற்றை படிக்க முடிவதில்லை.

பிறகு அன்னார், தர்க்கம் எதுவரை படித்துள்ளார்கள் எனக் கேட்டார்கள். அதற்கு நான் சிறிய, சிறிய நூல்களைப் படித்துள்ளேன் என்றேன். பிறகு நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் கை குலுக்கினேன் (முஸாஃபா செய்தேன்).

ஊர் திரும்பியதும், மவ்லவி அப்துல் ஹக்கீம் சாஹிப் கூறினார். நீ உன்னுடைய கைகளை உளியை கொண்டு செதுக்கு. இது சின்ன உளி ஆகும் இதனை வைத்து தான், தோல் தொழில் செய்யக் கூடியவர்கள், செருப்புத் தொழில் செய்யக் கூடியவர்கள் தோலை செதுக்குவார்கள். ஏனென்றால் நீர் மிர்ஸா சாஹிபுடன் முஸாஃபா (கை குலுக்கினீர்கள்) செய்தீர். ஆகையால் உங்களது கைகளை அவ்வாறு உளியை வைத்து செதுக்கினால் தான் கை சுத்தமாகும். (நவூதுபில்லாஹ்). எவ்வாறாயினும் அவர்கள் பைஅத் செய்துவிட்டு வந்தார்கள்.

**இதனைப் போன்று ஹஸ்ரத் குலாம் ரசூல் சாஹிப் வஸிராபாதி ஒரு சம்பவத்தை எழுதியவாறு கூறுகின்றார்கள்:**

வஸிராபாதில், சம்மர் ராஜ்கான். இது வஸிராபாதின் வடக்குப் பகுதியிலுள்ள ஒரு பெரிய வீடாகும். இதில் ராஜோரி காஷ்மீரின் முஸ்லிம் ராஜாக்கள் தங்குவார்கள். அல்லாஹ் வாலா என்ற பெயரை கொண்ட ஒரு மனிதர் மர்ஹூம் ராஜா அத்தாவுல்லாஹ் கான் சாஹிப். இவர் காபூலுடைய தூதுவர் ஆவார். அவரிடம் சென்று கூறினார். மக்கள் தேவையில்லாமல் குலாம் ரஸூலுக்குப் பின்பு செல்கிறார்கள் என்றார். ராஜா சாஹிப் அதற்கு என்ன எனக் கேட்டார். இவர் அஹ்மதியாகி இருந்தார். அவர் கூறினார். ஹாஃபிஸ் சாஹிபை இங்கு அழைத்து வாருங்கள். அவர் வந்து குர்ஆனில் கூறப்பட்டது போன்று நாம் மஸீஹ் உடைய ரஃபஅ ஐ ஏற்றுக் கொள்கிறோம். மேலும் ஹதீஸில் கூறப்பட்ட நுஸூலே மஸீஹ் அதாவது மஸீஹ் இறங்குதலையும் கூற வேண்டும் என்றார். ஊர் முழுவதும் இந்த அறிவிப்பு செய்யப்பட்டது. ஆயிரக்கணக்கில் முஸ்லிம்களின் எல்லா பிரிவுகளிலிருந்தும் மக்கள் ஒன்று கூடினர். நான் என்ன கூறுவேன்? என்பது எனக்கு தெரியும். மேலும் நான் கூறக்கூடியதை யாரும் புரிந்து கொள்ளமாட்டார்கள் என்பதும் எனக்கு தெரியும். ஏனென்றால் மறைமுகமாக இதனைக் கூறுவேன் என்றார். அவர் இதற்கு முன்பே அஹ்மதியாகி இருந்தார். மேலும் நான் கூறக்கூடிய விஷயத்தை ஒருவர் மட்டும் தான் புரிவார். அவரது பெயர் ஹக்கிம் சுல்தான் அலி ஆகும். அவர் எனது குடும்பத்தைச் சேர்ந்தவராவார். நான் கூறுவதைப் புரிய முடியும் என்றால் அவரால் மட்டும் தான் முடியும் என்றார்.

நான் அங்கு சென்றடைந்தேன், ராஜா சாஹிப் கூறினார்: அல்லாஹ் வாலே என பெயரைக் கொண்டவர். தாங்கள் மஸீஹ் ரஃபஅ மற்றும் நுஸுலை ஏற்றுக் கொண்டுள்ளீர்கள் எனக் கூறினார். இது உண்மையா? எனக் கேட்டார். நிச்சயமாக, மக்கள் அனைவரும் அமைதியாக இருந்தார்கள் என்றால், அதனை நான் கூறி விடுகின்றேன் என்றேன். மக்கள் அனைவரும் அமைதியாகி விட்டனர். ஆயிரக்கணக்கில் கூடியிருந்த மக்கள் மத்தியில் நான் ஒருவன் மட்டும்தான் அஹ்மதியாக இருந்தேன். அப்போது நான் கூறினேன். மக்களே! திருக்குர்ஆனில் எவ்வாறு மஸீஹ் உடைய ரஃபஅ வந்துள்ளதோ, மேலும் ஹதீஸில் நுஸுல் பற்றி வந்துள்ளதோ இதனை நான் உண்மையென்று கருதுகின்றேன். மேலும் எவர் இதனை ஏற்க மறுப்பாரோ, அவரை நான் நம்பிக்கையிழந்தவர் என கூறுவேன். இதனை மட்டும்தான் கூறியிருந்தேன். மக்கள் மத்தியில் வாழ்த்துக்கள் மற்றும் வரவேற்பு மிகுந்த சப்தத்துடன் ஒலிக்க ஆரம்பித்தது. அப்போது அந்தக் கூட்டத்திலிருந்து வெளியே வருவதை சிறந்ததாக கருதினேன். உடனே அங்கிருந்து வெளியே வந்து விட்டேன். ஆனால் நான் வெளியே வந்த பிறகு நான் நினைத்தது போன்று ஹக்கிம் சுல்தான் அலி, ராஜா சாஹிபிடம் நீங்கள் எதையுமே புரியவில்லை என்றார். அவர் உங்களது கண்களில் மண்ணைத் தூவி விட்டு சென்று விட்டார் என்றார். அவரை மீண்டும் அழைத்து வருமாறு கூறினார். நான் சமன் வாசலிருந்து வெளியேறியதும் சிலர் என்னைத் திரும்ப அழைத்துச் செல்ல தேடி வந்தனர். ஆனால், நான் வேறொரு வழியாக வீட்டிற்கு சென்றடைந்தேன். இரவு நல்ல படியாக கழிந்தது. ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு ராஜா சாஹிபுடைய ஒரு தூதுவர் பாபு ஃபஸல்தீன் சாஹிப் என்னிடம் வந்தார். அவர் கூறினார்: ராஜா மற்றும் சுற்றுப் புற மக்கள் கூறுகின்றனர். அதாவது ரஃபஅ மற்றும் நுஸுலுடைய வார்த்தை மூலம் எங்களுக்கு திருப்தி ஏற்படவில்லை. நான் கேட்டேன். பிறகு எவ்வாறு திருப்தி அடைவீர்கள்? அதற்கு அவர் ராஜா சாஹிப் போன்றோர் நீங்கள் எப்போது வரை மிர்ஸா சாஹிபை காஃபிர் என்று கூறமாட்டீர்களோ அதுவரை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்றார்கள்.

நான் காஃபிர் என ஏன் கூறவேண்டும்? என்றேன். அதற்கு அவர் மவ்லவிகள் கூறுகின்றார்களே! அதனால் கூற வேண்டும் என்றார். நான் கூறினேன்: மவ்லவிகள் மிர்ஸா சாஹிபை காஃபிர் எனக் கூறுகின்றார்கள். எனவே, நான் காஃபிர் என கூறுகின்றேன் என்றேன் அல்லது உள்ளத்தில் அவர் மவ்லவிகளைக் காஃபிர் என்று கூறினார். எனது எண்ணம் மவ்லவிகளைக் காஃபிர் எனக் கூறுவதாகத் தான் இருந்தது. அவர் திருப்தி அடைந்தவாறு சென்று விட்டார். அங்கு சென்று மஜ்லிஸில் கூறினார். பாருங்கள்! அவர் மிர்ஸா சாஹிபை காஃபிர் எனக் கூறிவிட்டார் என்றார். பிறகு மீண்டும் அதே சுல்தான் அலி கூறினார். மியான் நீங்கள் மீண்டும் கண்ணில் மண்ணைப் போட்டு கொண்டு வந்துள்ளீர்கள். அவர் மவ்லவிகளைத் தான் காஃபிர் எனக் கூறியுள்ளார் என்றார். நீங்கள் அவரிடம் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானியைக் காஃபிர் எனக் கூறுகின்றேன் என எழுதி வாங்குங்கள். அவர் மீண்டும் என்னிடம் வந்தார். இவ்வாறு இரண்டு நாட்கள் கழிந்து விட்டன. இதன் மூலம் எனது உள்ளம் கொஞ்சம் தைரியம் அடைந்தது. சகோதர்களே! நான் கூறியது உண்மைதான். எவர் மிர்ஸா சாஹிபை காஃபிர் எனக் கருதுகிறாரோ அவரை நான் காஃபிராகக் கருதுகிறேன். பிறகு அவர்கள் வருத்தமடைந்து விட்டனர்.

*நிராகரிப்போர் இன்று உங்கள் மார்க்கத்தி(ற்குத் தீங்கு செய்வதி)ல் நம்பிக்கை இழந்து விட்டனர். எனவே நீங்கள் அவர்களுக்கு அஞ்ச வேண்டாம். எனக்கே அஞ்சுங்கள. (5:4)*

இங்கு குர்ஆன் ஷரீஃபுடைய வசனம் எழுதப்பட்டிருக்கின்றது. அதாவது இன்றைய தினம் நிராகரிப்போர் மார்க்கத்திற்கு தீங்கு செய்வதில் நம்பிக்கை இழந்து விட்டனர். எனவே அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் அவர்களுக்கு அஞ்சாதீர்கள், எனக்கு அஞ்சுங்கள். இதன் பிறகு வழக்குகள் நடைபெற்றன. எந்தளவு என்றால் அவர்கள் பொய் பேசவே மாட்டார்கள் என நம்பினேனோ, அவர்கள் எனக்கு துன்பம் இழைப்பதற்காக வெளிப்படையாக நீதிமன்றத்தில் பொய் கூறினார்கள். எனக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டன.

ஆனால், நான் இவர்களைக் கண்டு ஒருபோதும் கவலை அடைந்தது இல்லை. இவ்வாறு இந்த சம்பவத்தை அதாவது மிர்ஸா சாஹிபை காஃபிர் எனக் கருதுபவரை நான் காஃபிர் எனக் கருதுகிறேன் என்ற இந்த சம்பவத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எடுத்துரைத்தேன். ஹஸ்ரத் சாஹிபிற்கு இந்தச் சம்பவம் எடுத்துரைக்கப்பட்டதும் ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் சிரித்தவாறு கூறினார்கள். பாருங்கள்! ஈமானை

மறைப்பதும், அதாவது குழப்பத்திலிருந்து தப்பிப்பதற்காக ஈமானை மறைப்பதும் ஒரு தர்ஜாவாகும். இதனைப் பற்றி சூரா முஃமினில்,

*ஃபிர்அவ்னின் சமுதாயத்தினருள் நம்பிக்கை கொண்டு, அந்த நம்பிக்கையை மறைத்து வைத்திருந்த ஒரு மனிதர் கூறினார்: என் இறைவன் அல்லாஹ் என்று கூறுகின்ற ஒரே காரணத்திற்காக நீங்கள் ஒரு மனிதரைக் கொலைச் செய்யப் போகின்றீர்களா? (40:29)* என வருகிறது.

நீங்கள் மிகவும் அழகாக சூழ்நிலையை கருத்தில் கொண்டவாறு செயல்பட்டு உங்களது உயிரை விஷமிகளிடமிருந்து காப்பாற்றி உள்ளீர்கள். இது அஹ்மதிகள் மீது இழைக்கப்படும் கொடுமைகளின் கதைகள் ஆகும். அவர்களை உண்மையிலிருந்து தடுப்பதற்காக நடந்த கதைகள் ஆகும். அவர்களை பயமுறுத்துவதற்காக நடைபெற்ற கதைகள் ஆகும். இது பழைய கதைகள் கிடையாது. நான் ஏற்கனவே கூறியது போன்று, இன்று 123 வருடங்கள் கழிந்த பிறகும் இதேபோன்று தான் அஹ்மதிகளுடன் பரிமாறப்படுகின்றது. ஆனால் அஹ்மதியத்தின் கூட்டம் இறையருளால் அனைத்து விதமான எதிர்ப்பும் இருந்தும் கூட முன்னேறிக் கொண்டே செல்கிறது. முன்னேறிக் கொண்டே செல்லும். இன்ஷா அல்லாஹ். உலகில் ஒவ்வொரு இடத்திலும் அஹ்மதிகள் ஈமானின் வலிமை பெற்றவாறு முன்னேறிச் செல்கின்றார்கள். மேலும் ஈமான் கொண்ட பிறகு இறைவனுடைய இந்த கட்டளையை முன்னிறுத்துகிறார்கள். அதாவது

*எனவே, நீங்கள் அவர்களுக்கு அஞ்சாமல் எனக்கே அஞ்சுங்கள்.(2:151)*

பயம் இருக்கிறது என்றால் அது இறைவனுக்காக மட்டும் தான் இருக்கிறது. எந்த படைப்பினத்திற்காகவும் பயம் இல்லை. அல்லாஹ் ஜமாஅத்தார்களிடம் ஈமானின் உறுதிப்பாட்டை மேலும் உண்டாக்குவானாக! மேலும் ஈமானை நிலைநிறுத்துவது மட்டும் இல்லாமல் அதிகமாக்கிக் கொண்டே செல்வானாக!

இன்று, இதேபோன்றே ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளது. ஈமானில் உறுதிப்பாடு உள்ள மக்கள்தான் தனது முன்னுதாரணத்தை வெளிப்படுத்துகின்றார்கள். குறிப்பாக பாகிஸ்தானில் வெளிப்படுத்துகின்றார்கள். இதில் நமது ஒரு வயதான அஹ்மதி ஷஹீதாக்கப்பட்டுள்ளார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். நாவாப் ஷாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய முஹம்மது யூசுஃப் சாஹிபுடைய மகன் மதிப்பிற்குரிய சவுத்திரி முஹம்மது அக்ரம் சாஹிப். இவர்களுடைய குடும்பம் போகுவா ஃபைஸ்லாபாத் மாவட்டத்தை சேர்ந்ததாகும். இவருடைய குடும்பத்தில் அஹ்மதிய்யத்தின் தொடர்பு இவருடைய தாதா ஹஸ்ரத் மியான் குலாம் காதிர் சாஹிப் (ரலி) பைஅத் மூலமாக நடைபெற்றது. இவருடைய தாதா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கையில் பைஅத் செய்தவர் ஆவார்.

சவுத்திரி முஹம்மது அக்ரம் சாஹிப் அவர்கள் போகுவா ஃபைஸ்லாபாத்தில் பிறந்தார்கள். ஷஹாதத்தின் போது இவருடைய வயது 80 ஆகும். நேற்று முன்தினம் இந்த சம்பவம் நடைபெற்றது.

இவர் தனது சகோதர்கள் மற்றும் தந்தையாருடன் இணைந்து கான்பூரில் இருந்த அன்னாரின் பூர்வீக நிலத்தில் விவசாயம் செய்து வாழ்ந்து வந்தார்கள். பிறகு 1960ல் நிலத்தை விற்பனை செய்துவிட்டு நவாப் ஷா சென்று சென்றுவிட்டார்கள். 2005ல் தனது மனைவியுடன் ஆஸ்திரேலியா சென்று வசித்து வந்தார்கள். அங்கு அவர்களுடைய பிள்ளைகள் இருக்கின்றார்கள். கடந்த வருடம் நவம்பர் மாதம் பாகிஸ்தான் வந்தார்கள். அப்போதுதான் இந்த சம்பவம் நடைபெற்றது. பிப்ரவரி 29, 2012ல் தனது பேரன் ரஃபீக் அஹ்மது சாஹிபுடைய மகன் முனீம் அஹ்மதுவுடன் தனது மருகனுடைய கடையிலிருந்து மதியம் 1.00 மணிக்கு வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். வீட்டிற்கு அருகில் வந்தபோது ஒரு மோட்டார் சைக்கிளில் அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் இவரைத் துப்பாக்கியால் சுட்டார்கள். அதில் அவர் காயம் அடைந்தார்கள். பிறகு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலே அவர் தனது உயிரை இறைவழியில் தியாகம் செய்து விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவருடன் இவருடைய பேரனுக்கு இடுப்பு எலும்பில் குண்டுகள் பாய்ந்தன. அது உள்ளே சென்று குடலை சேதப்படுத்தியது. அதற்கான ஆப்ரேஷன் நடைபெற்று விட்டது. தற்பொழுது

மருத்துவமனையில் அவசரப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அல்லாஹ் இவருக்கு சுகத்துடன் கூடிய நீண்ட ஆயுளை வழங்குவானாக!

ஷஹீது மர்ஹூம் 1960ல் நவாப்-ஷாவிற்கு shift ஆன பிறகு தனது வியாபாரத்துடன் ஜமாஅத்திற்கு மிகப்பெரிய தொண்டாற்றியுள்ளார். மிக நீண்ட காலம் இவர் தொண்டு செய்வதற்கான வாய்ப்பினைப் பெற்றிருந்தார். ஏறக்குறைய 35 ஆண்டுகள் வரை நவாப்ஷா மாவட்டத்தில் சந்தா ஆம் செயலராக பணியாற்றியுள்ளார்கள். இதனைப் போன்று மாவட்டத்தின் துணை அமீராகவும் செயல்பட்டு வந்துள்ளார்கள். ஷஹீது மர்ஹூம் நல்லொழுக்கம் கொண்டவராகவும், இபாதத் செய்யக் கூடியவராகவும், தஹஜ்ஜுத் தொடர்ந்து தொழுது வரக் கூடியவராகவும் பொருள் தியாகத்திலும் சிறந்தவராகவும் திகழ்ந்து வந்துள்ளார்கள்.

சிலர் எனக்கு தெரிவித்தார்கள். செகரட்ரி மாலாக இருந்த சமயத்தில் யாராவது இன்று நான் சந்தா கொடுக்க வேண்டும் என தொலைபேசி மூலமாக தெரிவித்தாலும் நீங்கள் இங்கு கொண்டு வாருங்கள் என்று கூறாமல் உடனே அவர் சந்தா கொடுக்கக் கூடியவரின் வீட்டிற்கு சென்று வசூல் செய்து வந்தார்கள். ஜமாஅத்துடன் நல்ல தொடர்பு கொண்டவராகவும், ஜமாஅத் பணிகளில் அதிகமாக ஈடுபட்டவராகவும் கிலாஃபத்துடன் அன்பு கொண்டவராகவும் இருந்து வந்தார். குத்பாக்களை மிகவும் கவனத்துடன் தொடர்ந்து கேட்டு வந்துள்ளார்கள். நவாப் ஷா நகரத்தின் சதர் சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள். மர்ஹூம் சாஹிபிடம் பொறுப்பாளர்களுக்கு கட்டுப்படக்கூடிய பண்பு மிகவும் அதிகமாக இருந்தது. சதர் சாஹிப் கூறுகிறார்கள். என்னை விட வயதில் அதிகமானவராக இருந்தும் கூட என்னிடம் (கட்டுப்படுதல் மற்றும் கண்ணியத்துடன்) நடந்து வருவார்கள். இம்முறை ஆஸ்திரேலியாவிலிருந்து வந்தபோது என்னிடமிருந்து ஏழை எளியவர்களுடைய பட்டியலை தயார் செய்ய கூறினார்கள். இதில் அஹ்மதிகளும், அஹ்மதி அல்லாதவர்களும் அடங்குவார்கள். அவர்கள் அங்கு இருந்த வரை அனைவருக்கும் தொடர்ந்து உதவி செய்து வந்தார்கள். இதைப்போன்று நவாப் ஷா உடைய சென்டர் பல நாட்களாக மூடப்பட்டிருந்தது. அதனை தனது முயற்சி மற்றும் உழைப்பின் மூலம் திறந்தார்கள். மேலும் அதன் கட்டுமானப் பணி தொடர்பாக அவர் கூறினார். இதில் தேவையான பராமரிப்புப் பணிகளையும் கட்டுமானப் பணிகளையும் செய்யத் தொடங்குங்கள். நான் ஆஸ்திரேலியா திரும்பிச் சென்று கட்டுமானத்திற்கான தொகையை கண்டிப்பாக அனுப்பி வைப்பேன் என்றார். ஆனால் அல்லாஹ் அவருக்கு அதற்கான வாய்ப்பினை வழங்கவில்லை. அங்குள்ள ஜமாஅத் அதனை முழுமைப்படுத்த வேண்டும். இவருக்கு ஷஹீது ஆவதற்கு மிகவும் அதிகமாக விருப்பம் இருந்தது.

இவருடைய மருமகள் எழுதுகிறார்கள்: யாராவது ஷஹீதாகி விட்டார்கள் என கேள்விப்பட்டால், உடனே இந்த மேன்மை யாருக்கு எழுதப்பட்டிருக்கிறதோ அவருக்குத் தான் கிடைக்கும் என்று கூறுவார்கள். கடைசியில் அல்லாஹ் இவருடைய விருப்பத்தை நிறைவேற்றி விட்டான். அவருடைய பிரிவால் வாடுபவர்களில் மனைவியைத் தவிர, 5 மகன்கள் மற்றும் 2 மகள்கள் உள்ளனர். பிள்ளைகள் அனைவரும் இறையருளால் திருமணம் ஆனவர்கள் ஆவார்கள். நான் கூறியது போன்று 4 மகன்கள் மற்றும் 1 மகள் ஆஸ்திரேலியாவில் வசிக்கிறார்கள். 1 மகன் மற்றும் 1 மகள் நவாப் ஷா பாகிஸ்தானில் வசிக்கிறார்கள். இவருடைய பேரன் முனீப் அஹ்மது பற்றி கூறியிருந்தேன். அவரது வயது 18 அல்லது 19 ஆகும். கல்லூரியில் இரண்டாம் வருடம் படித்து வருகிறார். அல்லாஹ் அவருக்கு பூரண குணமளிப்பானாக. தொழுகைக்குப் பிறகு அக்ரம் சாஹிபுடைய ஜனாஸா காயிப் தொழுகை நடைபெறும். இன்ஷா அல்லாஹ்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 02.03.2012**

Translated by : Moulavi N. ZIYAUL HAQ
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456